**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி.**

**அ.வ.எண்.194/2023**

**<u>தேதி : 13.11.2025</u>**

**<u>(பி.வா.சா.1 ) – திரு.ஹரிஸ்</u>**

**<u>சாட்சி அழைக்கப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.</u>**

**<u>குறுக்கு விசாரணை :– (வாதி தரப்பில்)</u>**

1. நான் 9ம் வகுப்பு படித்துள்ளேன். வாதி தங்கவேலை எனக்கு தெரியும். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக எனக்கு வழக்கறிஞர் அறிவிப்பு வந்ததா என்றால் வந்தது. அந்த அறிவிப்பை நான் பெற்றுக்கொண்டேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.3 அஞ்சல் ஒப்புகை அட்டையில் உள்ள கையொப்பம் என்னுடையதா என்றால் என்னுடையது அல்ல.

2. நீதிமன்றத்திலிருந்து எனக்கு அழைப்பாணை வந்தது. அழைப்பாணையை நான் கையொப்பம் செய்து பெற்றுக்கொண்டேன். என்னிடம் காட்டப்படும் அழைப்பாணையில் உள்ள கையொப்பம் என்னுடையது அல்ல. நீதிமன்றத்திலிருந்து தபால் மூலமும் எனக்கு அழைப்பாணை வந்தது என்றால் சரிதான். அந்த அழைப்பாணையை நான் பெற்றுக்கொண்டேன் என்றால் சரிதான். அதற்கான ஒப்புகை அட்டையில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான்.

3. இவ்வழக்கில் நான் எத்தனை எதிர்வழக்குரைகள் தாக்கல் செய்துள்ளேன் என்றால் 3,4 எதிர்வழக்குரைகள் தாக்கல் செய்துள்ளேன். எனக்காக வழக்கறிஞர் முன்னிலையாவதற்கு நான் வக்காலத்து கொடுத்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் வக்காலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் இ.ம.எண்.1/2024 பிரமாண வாக்குமூலத்தில் இருப்பது என்னுடைய கையொப்பம் அல்ல. என்னிடம் காட்டப்படும் எதிர்வழக்குரையில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான்.

4. வாதி பதிலுரை தாக்கல் செய்வதற்காக அனுமதி கோரி தாக்கல் செய்த மனுவில் நான் எதிர்உரை தாக்கல் செய்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் இ.ம.எண்.2/2025 எதிர்உரையில் இருப்பது என்னுடைய கையொப்பம் அல்ல. இவ்வழக்கில் நான் கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனக்கு

தெரியாது. அதில் நான் கையொப்பம் செய்துள்ளேனா என்றால் எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் கூடுதல் எதிர்வழக்குரையில் இருப்பது என்னுடையது அல்ல. நான் வாதி தங்கவேலிடம் கடந்த 10.10.2021 அன்று ரூ.95,000/-ஐ சாட்சிகள் முன்னிலையில் கடனாகப் பெற்றுக்கொண்டு கடனுறுதிச் சீட்டை எழுதிக்கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

5. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 கடனுறுதிச் சீட்டில் உள்ள கையொப்பம் என்னுடையது அல்ல. நான் சாட்சிகள் முன்னிலையில் மேற்படி கடனுறுதிச் சீட்டில் கையொப்பம் செய்துவிட்டு வழக்கிற்காக அதை மறுப்பதாகச் சொன்னால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் வாதியின் பெயர் உள்ளதா என்றால் இல்லை. அதில் என் ஆட்டோவின் பெயரை அவர் குறிப்பிட்டுள்ளார். பி.வா.சா.ஆ.1 ஆவணம் நாங்களாக உற்பத்தி செய்த ஆவணம் என்றால் சரியல்ல. நான் வாதியை ஏமாற்றும் நோக்கில் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை :-</u> இல்லை.

Taken down by me in open court and
read over to the witness in Tamil and
acknowledged by him/her to be correct.

K BHARATHI Digitally signed by K BHARATHI Date: 2025.10.30 20:20:11 +0530

Additional Sub Judge,
Palani.